(6 pages) **Reg. No. :** .....

Code No. : 4097 **Sub. Code : R 3 TA 51**

B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2010.

Fifth Semester

Tamil — Main

காப்பிய இலக்கியம்

(For those who joined in July 2008 and afterwards)

Time : Three hours **Maximum : 75 marks**

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்கட்கும் சரியான விடையைத் தேர்வு செய்க.

1. காவிரி நாடன் என்பது யாரைக் குறிக்கும்

(அ) பாண்டியன் (ஆ) சோழன்

(இ) சேரன் (ஈ) கோவலன்.

2. மணிமேகலையுடன் உவவனத்திற்குச் சென்றவர் யார்?

(அ) சுதமதி (ஆ) மாதவி

(இ) சித்ராதேவி (ஈ) கண்ணகி.

3. சீவகசிந்தாமணியின் ஆசிரியர்

(அ) சேக்கிழார் (ஆ) திருதக்கதேவர்

(இ) நம்பியாண்டார் நம்பி (ஈ) திருநாவுக்கரசர்.

4. தக்க நாட்டின் தலைநகரின் பெயர்

(அ) மதுரை (ஆ) பூம்புகார்

(இ) கேமமாபுரம் (ஈ) இந்திரபுரம்.

5. சூளாமணி எக்காப்பிய வகையைச் சார்ந்தது?

(அ) பெருங்காப்பியம் (ஆ) சிறுகாப்பியம்

(இ) புராணம் (ஈ) இதிகாசம்.

6. சந்திரன் சுவர்க்கி என்பவர் ஆதரித்த புலவர்

(அ) கம்பன் (ஆ) புகழேந்தி

(இ) ஒட்டக்கூத்தர் (ஈ) ஔவை.

7. 'யாணர்' என்பது எதனைக் குறிக்கும்

(அ) அழகு (ஆ) ஊர்

(இ) ஆள் (ஈ) விலங்கு.

8. பெரிய புராணத்தை எழுதியவர்

(அ) சேக்கிழார் (ஆ) திருதக்கதேவர்

(இ) புகழேந்தி (ஈ) ஒட்டக்கூத்தர்.

9. தேம்பாவணியினை எழுதியவர்

(அ) கால்டுவெல் (ஆ) வீரமாமுனிவர்

(இ) நபிகள் நாயகம் (ஈ) கிருஷ்ணப்பிள்ளை.

10. எகிப்து மன்னன் யார்?

(அ) மோசே (ஆ) பாரோன்

(இ) யூதர் (ஈ) திருமறை.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.

11. (அ) 'சாலியொருமீன்' - குறிப்புத் தருக.

(அல்லது)

(ஆ) மலர் வனம்புக்க காதையில் மணிமேகலையின் வருத்தம் பற்றி எடுத்துரைக்க.

12. (அ) கேமசரியின் அழகு எத்தகையது? விளக்குக.

(அல்லது)

(ஆ) புனமாமயிலே பொழிலே புனலே..... என விளித்து கேமசரியை என்ன கேட்டாள்? விளக்குக.

13. (அ) நிமித்திகனின் செயல்பாடுகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) புகழேந்தி - குறிப்புரைக்க.

14. (அ) 'சிறக்கும் மாமியர் மூவர்' என உரைக்கும் சீதையின் மனநிலை பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) இளையான் குடி மாற நாயனார் சிவபக்தியினை எடுத்துரைக்க.

15. (அ) திருமதீனமா நகரத்திற்கு யார் வருவதாகக் கூறினார்கள். விளக்குக.

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவர் பற்றி எழுதுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களில் விடை தருக.

16. (அ) மாதவியின் முடங்கல் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உவவனத்தில் இருந்த பதும பீடிகையின் சிறப்பினை எடுத்துக் கூறுக.

17. (அ) தக்க நாட்டின் தலைநகராகிய கேமமாபுரத்தின் இயல்பினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) கேமசரி-சீவகன் சந்திப்பினை எடுத்துரைக்க.

18. (அ) பயாபதி மன்னனின் வாழ்க்கை நிலை வழி உணர்த்துவன பற்றிக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) நளவெண்பாவில் சுயவரக் காண்டம் காட்டும் சொற்சுவையும் பொருட்சுவையும் பற்றி எழுதுக.

19. (அ) கம்பனின் கவிநயத்தினை சூளாமணிப் படலம் வழி நிறுவுக.

(அல்லது)

(ஆ) கணவன் மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் - இதனை இளையான்குடி மாற நாயனார் வாழ்க்கையின் வழி நிறுவுக.

20. (அ) உமறுப்புலவரின் கவிநயத்தால் சீறாப்புராணத்தைப் பாடிப்பெரும்பேறு பெற்ற புலவர் எனலாம் - விளக்குக.

(அல்லது)

(ஆ) தேம்பாவணி உணர்த்தும் நோவா குடும்பம் பற்றிய செய்திகளைப் புலப்படுத்துக.

———————